# 07 கவிதைகள் மூன்று

புதுநிலவு முழுநிலவு அமுதமழை பொழியும்
மதுநிறைந்து வான்வெளியில் மண்ணிடையே வழியும்

பசுந்தழைகள் பளபளக்கும், பவழமல்லி சிரிக்கும்
விசும்பிடையே ஒளிருகின்ற வெள்ளியையும் பழிக்கும்

கோட்டுமரம் நீட்டுகிளை கோலமிட்டுப் பார்க்கும்
தீட்டும்நிழற் கோலமதைக் காற்றழித்துத் தோற்கும்

சாளரங்கள் திரைவிலகிச் சந்திரகலை வாங்கும்
சப்ரமஞ்சம் மீதினிலோர் கன்னிமகள் தூங்கும்

நிலவொளியில் கனவுலகில் நேசன்வந்து காணும்
'கலகலெனப்' புன்னகையும் கண்ணீரும் தோணும்

கனவுகண்டு துயில்கலைந்து கண்விழித்து நோக்கும்
கனவின்பம் குலைந்ததனால் கண்களில் நீர் தேக்கும்



நீலவிழி நிலவொளியில் நீண்டவழி தேடும்
'காலம்வரும் காந்தன்வரும்' என்றுமனம் பாடும்

சின்னஞ்சிறு குடிசை ஒன்றில் தண்ணிலவு பாயும்
கன்னிமனக் கனவங்கோர் காதலர்பால் தோயும்

விளக்கின்றி விண்ணொளியில் விருந்துண்டு மகிழ்வார்
உழக்கரிசிக் கஞ்சியிலே உபசரணை புரிவார்

குழந்தைகளும் குமரிகளும் குதியாட்டம் போடும்
விழுந்தெழுந்து ‘கலகல’ த்து வீதியெலாம் ஓடும்

நீரோடும் நதியெல்லாம் பாலோடும் காட்சி
காரோடும் ககனமெலாம் கலைமதியின் ஆட்சி

இத்தனையும் செய்தநிலா இருட் குகையில் சாயும்
நித்திரை துறந்தமகள் நிலவினையே காயும்

-ஜெயகாந்தன்-

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| விசும்பு | - | வானம் |
| கோட்டுமரம் | - | கிளைகள் உடையமரம் |
| சப்ரமஞ்சம் | - | மேற்கட்டமைந்த அழகிய கட்டில் |
| ககனம் | - | ஆகாய வெளி |
| நேசன் | - | அன்புக்குரியவன் |
| தண்ணிலவு | - | குளிர்ச்சியான நிலவு |
| உழக்கு | - | ஒரு வகை அளவு (முகத்தல்) |
| குதியாட்டம் | - | ஆரவாரித்தல் |
| காரோடும் ககனம் | - | கருமுகிலுடன் கூடிய ஆகாயவெளி |
| காயும் | - | வெறுக்கும் |
| பசுந்தழை | - | பசுமையான பயிர் |

## கிரகித்தற் பயிற்சி

1. நிலவு இயற்கையை எவ்வாறு அழகு செய்கிறது?
2. நிலவில் குதூகலம் அடைவோர் யார்?
3. நிலவின் ஆட்சி எங்கெங்கு எல்லாம் பரந்திருப்பதாகக் கவிஞர் குறிப்பிடுகிறார்.
4. அமுதமழை, இருட்குகை ஆகிய சொற்றொடர்களை விளக்குக.
5. இக்கவிதையில் இழையோடும் உணர்வு யாது?
6. இக் கவிதையில் உங்களுக்குப் பிடித்த பகுதி யாது? காரணம் தருக.
7. இக் கவிதையில் நீர் காணும் சிறப்புக்கள் யாவை?

# நீர் வீழ்ச்சி

ஊழி முடிந்திடும்
ஓசை எழுந்திட
உலகு நடுங்கிடவே
ஆழி கவிழ்ந்தது
போல விழுந்திடும்
அருவி யிதற் புதமே!



சிதறிய திவலைகள்
சிவனுடைக் கண்பொறி
சினந்ததுபோல் எழுமே
அதிரும் இசைக் கழல்
அன்னையின் கூத்தென
ஆடிவரும் புனலே.

-சிட்டி-

## அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஊழி | - | உலகம் முடியும் காலம் |
| 2 | ஆழி | - | சமுத்திரம் |
| 3 | திவலை | - | துளி |
| 4 | கழல் | - | காலில் அணியும் ஆபரணம் |
| 5 | புனல் | - | நீர் ∴ ஆறு |

## கிரகித்தற் பயிற்சி

1. நீர் வீழ்ச்சி பாய்ந்து விழும் அழகை கவிஞர் எவ்விதம் வர்ணிக்கிறார்?
2. இக்கவிதையில் நீர் காணும் சிறப்புக்கள் யாவை?
3. சிதறிய திவலைகளின் அழகு எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது? விளக்குக.

## வெளிச்சம்

வீடு முற்றும் இருட்டு மண்டிக் கிடக்கும் வேளை
விஷப் பூச்சி புழுக்களுடன்
சிலந்தி, பாம்பும்
ஓடி அங்கு விளையாடித் திரிதல் கூடும்
ஒளி கிடைத்தால் அவற்றை எல்லாம் ஒழித்தல் கூடும்

நாடு முற்றும் இருட்டு மண்டிக் கிடக்குமானால்,
ஞாய சபை நூறிருந்தும் நன்மை உண்டோ?
கேடு கெட்ட அறியாமை இருள் நீங்காமல்,
கிடைக்குமோ மருந்துக்கும், நீதி ஏதும்?

கண்ணாடி புகை மூடிக் கறுத்திருந்தால்,
கட்டாயம் விளக்கின் ஒளி மங்கும் தானே!
சுண்ணாம்பு பூசி அதைத் துடைக்க வேண்டும்
சுத்தமாய், துப்புரவாய் - வெளிச்சம் கூடும்

தண்ணீரிற் படர்ந்திருக்கும் பாசி நீக்கிச்
சரி செய்தால் அல்லவோ, தூய்மை தோன்றும்?
கல்லாமை என்கின்ற புகையை ஊதக்
கனல் வீசி ஒளி பிறக்கும்.
கல்வி மூளும்.

கல்வியினை ஊட்டுகிற உபாத்தியாயர்
கட்டாயம் அறிஞராய் இருக்க வேண்டும்.
பல்லுடைக்கும் பழம்பாட்டின் கருத்துச் சொல்லப்
பழகி வைத்த படிப்புமட்டும் போதாதன்றோ?

புல்லு நுனிப் பூப்போல மொட்டவிழ்க்கும்
புதுப்பாட்டின் அருமைகளும் அறிதல் வேண்டும்
வில்லெறியும் அம்பைப்போல் இலக்கைத் தாக்கும்
விசையான சொல்லாற்றல் மிகவும் வேண்டும்.

கணக்கறிந்து தொழில் நுட்பம் அறிந்து,
சொந்தக் கைவினையின் திறனடைந்து,
கலங்கிநிற்கும் உணர்ச்சிகளைத் தெளிவித்து
வாய்க்கால் கட்டி ஓடவைக்கும் திறனடைந்து
விஞ்ஞானத்தை-
பிணக்குகளுக்காக அன்றி
அமைதிக்காகப்
பேணும் ஒரு மனப்பான்மைப் பேறடைந்து
மணக்கின்ற கலைச்சுவைகள் வளர வைக்கும்
வாய்ப்புடைய அறிஞர்களே உபாத்தியாயர்.

கிளிப்பிள்ளைப் பாடத்தால் நன்மை என்ன?
கேள்விகளைச் சரியாகக் கேட்டால் தானே,
துளிப்பிழையும் இல்லாத விடை கிடைக்கும்?
தூண்டினால் அல்லவோ துலக்கம் தோன்றும்?
வழிப்படுத்தத் தெரிந்தவர்தான் உபாத்தியாயர்.
மாணவர்கள் அந்த வழி நடக்க வேண்டும்.
விளக்குப்போல் ஆசிரியர் இருப்பாரானால்..
விளக்குகளாய் மாணவரும் ஒளி விடாரோ?

-முருகையன்-

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| பிணக்கு | - | மாறுபாடு |
| கல்லாமை | - | அறியாமை |
| மண்டி | - | திரளுதல் / செறிவாக |
| இலக்கு | - | நோக்கு |
| விசை | - | வேகம் |
| துலக்கம் | - | ஒளிருதல் |
| தூண்டுதல் | - | வழிப்படுத்தல் |

## கிரகித்தற் பயிற்சி

1. வீடு முற்றும் இருட்டு மண்டிக் கிடந்தால் யாது நிகழும்? அதை எவ்வாறு இல்லாது செய்யலாம்?
2. நாட்டின் இருள் நீங்கி நீதி எப்போது கிடைக்கும்?

3. ‘‘ கல்லாமை என்ற புகையை ஊதக் கனல் வீசி ஒளி பிறக்கும் கல்விமுளும் ’’ இந்தத் தொடரின் சிறப்பினை விளக்குக.
4. கல்வியினை மூட்டுகின்ற உபாத்தியாருக்கு இருக்க வேண்டிய திறன்கள் யாவை எனக் கவிஞர் கூறுகின்றார்?
5. இக்கவிதையில் இடம் பெற்றுள்ள உவமை, உருவக அணிகளை இனங்கண்டு எழுதுக.
6. இக்கவிதை ஊடாக கவிஞர் கூற விரும்புவது யாது? அதை எவ்விதம் கூறுகிறார்.?
7. இருள், அறியாமை ஆகிய இரண்டினாலும் வரும் கேடுகள் யாவை?
8. **பின்வரும் பாடலடிகளின் கருத்துக்களை விளக்குக.**
   i. ‘‘ பல்லுடைக்கும் பழம்பாட்டின் கருத்துச் சொல்லப் பழகிவைத்த படிப்புமட்டும் போதாதன்றோ’’
   ii. ‘‘ புல்லு நுனிப் பூப் போல மொட்டவிழ்க்கும் புதுப்பாட்டின் அருமைகளும் அறிதல் வேண்டும்.’’
   iii. ‘‘ வில்லெறியும் அம்பைப் போல இலக்கைத் தாக்கும் விசையான சொல்லாற்றல் மிகவும் வேண்டும்.’’

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1 ‘நிலவுக்காட்சி’ கவிதையில் வரும் பெயர்ச்சொற்களைப் பட்டியற்படுத்துக.
2 அக்கவிதையில் நிலவைக் குறிப்பிட கையாளப்பட்டுள்ள சொற்களை எழுதுங்கள்.
3 நிலவு பற்றிய வேறு கவிதைகளைத் தொகுத்து நூலாக்குங்கள்
4 நீங்கள் இரசித்த இயற்கைக் காட்சியை பற்றி பத்துவரிகளுக்குள் அமையுமாறு பந்தி அமையுங்கள்.
5 இயற்கை பற்றி குறுங்கவிதைகள் சிலவற்றைத் தொகுத்துக் காட்சிப்படுத்துங்கள்.
6 குறுங்கவிதைகளைத் தொகுத்து இலக்கியமன்ற நிகழ்வொன்றில் கவியரங்கம் நிகழ்த்துங்கள்.

# இலக்கணம்

## சொற்புணர்ச்சி I

தரம் 8 இல் புணர்ச்சி பற்றி கற்றுள்ளீர்கள். அவற்றை மீளவும் ஞாபகப்படுத்திக் கொள்ளவும்.

“சொற்களிலுள்ள எழுத்துக்கள் ஒன்று சேர்வது புணர்ச்சி ஆகும்.”

இலக்கணத்தில் புணர்ச்சி என்பது சொற்கள் அல்லது சொல்லின் உறுப்புக்கள் பொருள் தரும் வகையில் ஒன்றுடன் ஒன்று இணைந்து வருவதைக் குறிக்கும்.

நாங்கள் புத்தகத்தைப் படித்தோம் என்ற வாக்கியத்தில் மூன்று சொற்கள் உள்ளன நாங்கள்+புத்தகத்தை+படித்தோம் ஆகிய மூன்று சொற்களும் ஒன்றை அடுத்து மற்றது இணைந்து வந்து பொருள் தரும் வாக்கியமாகின்றது. நாங்கள் என்ற சொல்லில் நாம் , கள் ஆகிய இரண்டு உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வந்து பொருள் தருகின்றன புத்தகத்தை என்ற சொல்லில் புத்தகம் ,அத்து, ஐ ஆகிய உறுப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்து வந்து பொருள் தருகின்றன. படித்தோம் என்ற சொல்லில் படி ,த்த், ஓம் ஆகிய மூன்று உறுப்புக்கள் இணைந்து வந்து பொருள் தருகின்றன

| | | | | |
|---|---|---|---|---|
| நாம் + கள் | ⟶ | புத்தகம் + அத்து + ஐ | ⟶ | படி +த்த் +ஓம் |
| நாங்கள் | | புத்தகத்தை | | படித்தோம் |

என இணைந்து வந்து பொருள் தருகின்றது

இவ்வாறு சொல்லின் உறுப்புக்கள் அல்லது சொற்கள் பொருள்தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவதே புணர்ச்சி எனப்படும்

இரண்டு சொற்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து வருவதை புணர்ச்சி எனக் கற்றோம். அவ்விரு சொற்களில் முதலில் நிற்கும் சொல் நிலை மொழி என்றும் பின்னால் வரும் சொல் வருமொழி என்றும் அழைக்கப்படும்

இரண்டு சொற்கள் புணரும் போது நிலைமொழியின் முடிவில் உயிரெழுத்து இருந்தால் அதனை உயிரீற்றுப் புணர்ச்சி என்றும் நிலைமொழியின் இறுதியில் மெய்யெழுத்திருந்தால் அதனை மெய்யீற்றுப் புணர்ச்சி என்றும் கூறுவர்

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| துணி + வாங்கினாள் | = | உயிரீற்றுப் புணர்ச்சி |
| அவன் + வந்தான் | = | மெய்யீற்றுப் புணர்ச்சி |

நிலை மொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் புணர்ச்சிக்கு முக்கியமானவை. புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்தின் அடிப்படையில் நான்கு வகையாக வகுக்கலாம்

1. உயிர் முன் உயிர் புணர்தல்
2. உயிர் முன் மெய் புணர்தல்
3. மெய் முன் உயிர் புணர்தல்
4. மெய் முன் மெய் புணர்தல்

இந்நான்குவகைப் புணர்ச்சிகளில் தோன்றல்,திரிதல்,கெடுதல்,இயல்பாதல் ஆகிய நான்கு மாற்றங்கள் நிகழும்.

**உதாரணம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வேலை | + | வாய்ப்பு | - | வேலைவாய்ப்பு | - | இயல்பு |
| விலை | + | பட்டியல் | - | விலைப்பட்டியல் | - | தோன்றல் |
| பல் | + | பசை | - | பற்பசை | - | திரிதல் |
| நீலம் | + | வானம் | - | நீலவானம் | - | கெடுதல் |

## 1. உயிர் முன் உயிர் புணர்தல்

நிலைமொழியின் இறுதியிலும் வருமொழியின் முதலிலும் உயிரெழுத்துக்கள் வந்தால் இடையில் ய கரமெய் அல்லது வகர மெய் தோன்றிப் புணரும். இவ்வாறு தோன்றும் மெய்யை உடம்படுமெய் என்பர்.

**ய்,வ்** என்பன உடம்படுமெய்களாக வரும்

நிலைமொழியின் இறுதியில் இ, ஈ, ஐ என்னும் உயிரெழுத்துக்களில் ஒன்று இருந்து, வருமொழி முதலில் உயிரெழுத்திருந்தால் அவற்றிற்கு நடுவில் ய் என்னும் உடம்படுமெய் தோன்றும்.

**உதாரணம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாடி | + | அறை | = | மாடியறை | = | இ |
| தீ | + | எரிந்தது | = | தீயெரிந்தது | = | ஈ |
| பனை | + | ஓலை | = | பனையோலை | = | ஐ |

நிலைமொழியின் இறுதியில் அ,ஆ,உ,ஊ,ஒ,ஓ,ஔ என்னும் உயிரெழுத்துக்களில் ஒன்று இருந்து வருமொழி முதலில் உயிரெழுத்திருந்தால் வ் என்னும் உடம்படுமெய் தோன்றும்.

**உதாரணம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வருக | + | என்றான் | = | வருகவென்றான் | = | அ |
| வா | + | என்றான் | = | வாவென்றான் | = | ஆ |
| எடு | + | என்றான் | = | எடுவென்றான் | = | உ |
| பூ | + | இதழ் | = | பூவிதழ் | = | ஊ |

நிலை மொழி ஈற்றில் ஏ காரம் வந்து, வரு மொழி முதலில் உயிரெழுத்து வந்தால் ய், வ் ஆகிய இரண்டு உடம்படுமெய்களும் தோன்றலாம்.

**உதாரணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| **அவனே** | **+** | **அழகன்** | **=** | **அவனேயழகன்** |
| **சே** | **+** | **அடி** | **=** | **சேவடி** |

## 2. மெய் முன் உயிர் புணர்தல்

புணர்ச்சியின் போது மெய்யெழுத்தின் முன் உயிரெழுத்து வந்தால் இரண்டும் இணைந்து உயிர்மெய் ஆகும்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| கடல்+அலை | = | கடலலை |
| யாழ்+ஓசை | = | யாழோசை |
| வலம்+இடம் | = | வலமிடம் |

தனிக்குற்றெழுத்தின் பின்வரும் மெய்யெழுத்து இரட்டிக்கும்.

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| **தன்** | **+உடைய** | **=** | **தன்னுடைய** |
| **நல்** | **+அறிவு** | **=** | **நல்லறிவு** |

## பயிற்சி

1. உயிர் முன் உயிர் புணர்வதற்கு நீங்கள் படித்த கவிதைகளிலிருந்து ஐந்து உதாரணங்கள் தருக.
2. பின்வரும் தொடர்களில் உள்ள சொற்களைப் பிரித்து புணர்ச்சி விதி கூறுக.

   (அ) கனவுகண்டு துயில் கலைந்து கண்விழித்து நோக்கும்
   (ஆ) விளக்கின்றி விண்ணொளியில் விருந்துண்டு மகிழ்வார்.
   (இ) நீரோடும் நதியெல்லாம் பாலோடும் காட்சி

3. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| சொல் | பிரிப்பு | வகை |
|---|---|---|
| பழம்பாட்டு | பழமை + பாட்டு | விகாரம் |
| அமுதமழை | | |
| கோலமிட்டு | | |
| இருட்குகை | | |
| ஞாய சபை | | |
| காற்றழிந்து | | |



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

4. கீழ் வருவனவற்றுள் உடம்படு மெய்யாக யகர மெய், வகர மெய் என்பன இடம் பெற்றுள்ள சொற்களை அட்டவணைப்படுத்துக.

ஆட்சியமைந்து, உருவெடுத்தான், கன்னியொருத்தி, போவென, பாவோதி, மலையோரம், அலைகவென்றான,. மணியடித்தது, தீயெரியும், பூவினம்.

**உதாரணம்**

காட்சியறை - யகரமெய் தோன்றுதல் → காட்சி + ய் + அறை

வாவென - வகரமெய் தோன்றுதல் → வா + வ் + என

## மொழி வளம்

### இரட்டைக் கிளவி

தனித்துப் பிரிக்கமுடியாததும் பிரித்தால் பொருள் தராததுமாக இருக்கும் இரட்டைச் சொற்கள் இரட்டைக்கிளவி எனப்படும். அவை பல குறிப்புப் பொருளையும் உணர்த்தவல்லன. இரட்டைக் கிளவி தனித்து ஒலிக்காமல் எப்போதும் இரட்டித்த சொற்களாகவே ஒலிக்கும்.

1. கதகத
2. கரகர
3. மொழுமொழு
4. குடுகுடு
5. சடசட
6. விண்விண்
7. வளவள
8 குளுகுளு
9. முணுமுணு
10. முறுமுறு
11. படபட
12. மடமட
13. திருதிரு
14. சளசள
15. சுள்சுள்

## பயிற்சி

01. இரட்டைக் கிளவிகள் பத்தைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமையுங்கள்.

02. இரு குழுவாகப் பிரிந்து இரட்டைக் கிளவிகளை வைத்து சிறு வாக்கியம் கூறும் போட்டியொன்றை நடத்துங்கள்.